
# 22

# மழைக்கை



**1**

**பாத்திரங்கள் - கண்ணன்**
**குந்தி**
**கன்னன்**
**இந்திரன்**
**வாயில்காப்போன்**
**அசரீரி**

**(குந்தியின் மனை. எதிர்பாராத நிலையில் அங்கு வந்த கண்ணபிரானை வரவேற்கிறாள் குந்தி.)**

**கண்ணன்:**
என்ன இவ்விடத்து யாரும் இல்லையோ? எங்கே...

**குந்தி:**
யார்.... ஓ!
கண்ணனா வருக! உன்றன் காலடி பட, என் சிற்றில்
பண்ணிய தவமே இன்று பலித்தது! ஐவர் தம்மை
உன்னுரு வத்தில் கண்டேன்.

**கண்ணன்:**
உடல்நிலை நலமா மாமி?....

**குந்தி:** இருக்கிறேனப்பா, உன்றன்இன்னருள் எனினும் நெஞ்சில்
வருத்தமே, வனத்தில் ஐவர் வருகிற வரைக்கும்.....

**கண்ணன்:**
சின்னாள்
பொறுத்துக்கொண்டிருங்கள் இந்தப்
போர்.... முடிவெய்திவிட்டால்...

**குந்தி:**
கருத்தென்ன கண்ணா? கூறு......

**கண்ணன்:**
கயவர்க்கு முடிவுகாலம் (கோபமாக)
பாண்டவர்க் கிந்த நாட்டின் பரம்பரைப் பங்கு கோரல்
வேண்டியே துரியன்பால் ஓர் தூதனாய் வந்தேன்.

**குந்தி:**
ஐவர்
ஆண்டிகள் போலக் காட்டில் அலையவும் அருளில்லாது...

**கண்ணன்:**
ஈண்டிருந்(து) அரசாள்தற்கே எண்ணினான் எந்தநாளும்!

**குந்தி:**
கொஞ்சமும் இதயமில்லாக் கொடியவன்,
என்ன சொன்னான்.

**கண்ணன்:**

வெஞ்சமர் விழைந்தான்! ஐந்து
வீடும் யான் ஈயேன்'' என்றான்!

**குந்தி:**

பஞ்சவர் சபதமெல்லாம் பலிக்குமா கண்ணா?...

**கண்ணன்:**

போரில்...........
நஞ்சினும் கொடியன்....
அந்த நாய்மகன் துரியன் சாய்வான்...

**குந்தி:**

(துயரத்தோடு)
"பெருநிலம் பெறுதல் வேண்டி
பேயினை நாயைப் போல
ஒருகுலத் துதித்த மன்னர் ஒருவரை யொருவர் கொல்லப்
பொருதநர்'' என்றே வையம் புன்வசை பொழிதல் கேட்டு
உருகிநெஞ் சழியவோ நான் உயிருடன் இருந்தேன்..... ஊழே!
(அழுகை)

**கண்ணன்:**

ஊழையும் வெல்லும் ஆற்றல்
உழைப்பவர்க்கு உண்டு தாயே....
காளை.... உன் மூத்தமைந்தன்
கயவரைப் பிரிந்து வந்தால்
நாளையே வெற்றி நம்பால் நண்ணுதல் திண்ணம்!

**குந்தி:**

யாரை...!
ஏழையென் மூத்தமைந்தன்' என்றனை?

**கண்ணன்:**

இயம்புகின்றேன்.
துருவாச முனிவர் பூசைத் தொண்டுகள் புரிந்தாய், அன்னார்
அருமையாம் மந்திரங்கள் ஐந்தினை உபதேசித்தார்...

**குந்தி:**

கருமுகில் வண்ணா!
போன கதையெல்லாம் எதற்கு?

**கண்ணன்:**

வெய்யோன்...
அருளினால் எதிர்பாராது ஆண்மகவொன்று பெற்றாய்.
மகவெனும் செல்வம், இந்த மாநிலச் செல்வத்துள்ளே
மிகமிக உயர்ந்த செல்வம்!

**குந்தி:**

மேலுமோர் செல்வம் உண்டோ? (அழுகிறாள்)

**கண்ணன்:**

அகமகிழ் வெய்தல் விட்டு அஞ்சினாய் மானம் எண்ணி

**குந்தி:**

பகரத்தான் முடியுமா அப்பாவத்தின் பழியை?
நான்பெண்!

**கண்ணன்:**

என்றஞ்சி...

**குந்தி:**

இரக்கமின்றி என்னவோ செய்தேன் பாவி...

**கண்ணன்:**

அன்றுநீ ஆற்றில்விட்ட அவன் அருச்சுனனைப்போரில்
கொன்றொழிப்பதையே நோக்காய், கொடுங்கணை
எடுத்துக் கொண்டான்.

**குந்தி:**

இன்றவன் எங்கே உள்ளான்! என்ன பேர்?

**கண்ணன்:**

கன்னன்!

**குந்தி:**

என்ன! ஆற்றிலே விட்டதுண்மை, அதற்குப்பின்...?

**கண்ணன்:**

கண்ணிரண்டும்
தோற்றவன் இருக்கின்றானே... துரியனின் தந்தை, தேரைக்
காற்று வேகத்தில் ஒட்டும் கலைவலான் அதிர(த)ன்கண்டு
போற்றியே வளர்த்தான், நன்கு
போர்க்கலை பயின்றான் நின்சேய்!
திறமையைக் கண்டு நட்புச் செய்தலும் உலகியற்கை
துரியனும் கன்னனோடு தோழமை கொண்டான்.

**குந்தி:**

ஓ...!ஓ!

**கண்ணன்:**

பிறகென்ன...
அரசும், வாழ்வும் பெற்றுத்தன் கொடைத்திறத்தால்
அரசர்க்கும் அரசனானான்! ஆண்மைக்கும் அவனே யானான்!
காண்டவம் எரித்த அன்று, காட்டை விட்டகன்ற நாகம்
ஆண்டகை கன்னன் கையில் அரியதோர் பகழி யாகி
நீண்டநாள் பழிதீர்த்தற்கே நினைத்துளது! அதனைவெல்ல
வேண்டுமேல் கன்னன்பால்நீ வேண்டுக வரங்கள் சென்று,

**குந்தி:**

(விம்மியழுது)
என்ன பாதகத்தி நான்! என் இரு கண்ணில் எந்தக்கண்ணில்
மின்னிடும் ஒளியை நூர்ப்பேன்! மேதினி சிரிக்கும் மேலும்
கன்னன் பால் வரம் பெற்றால் - உன்
காண்டிபன் உயிர் வாழ்வானா?

**கண்ணன்:**

எண்ணம் போல் நடக்கும் எல்லாம், ஏன் இதற்கு அழுகை



இலவச விநியோகத்திற்காக

**குந்தி:**

கண்ணா... (விம்முகிறாள்)

**கண்ணன்:**

இந்திரன் மகனைக் கன்னன் இலக்குவைத் தெய்யும்நாக
தந்திரக்கணைக்குப் பார்த்தன் தப்பினால், அதனை மீண்டும்
எந்தக் காரணத்துக்கேனும் இன்னும் ஓர் முறை ஏவாத
அந்த ஓர் வரமே போதும்
அருச்சுனன் பிழைத்துக் கொள்வான்!

**குந்தி:**

எப்படி இதை நான் செய்வேன்! இருவரும் இதே வயிற்றில்
உற்பவித்தவர்கள் அந்தோ... ஒருவனை இழப்பதென்றால்...
அற்பமா கண்ணா... கன்னன்?

**கண்ணன்:**

ஐந்தலை நாகம் போல
ஒற்றையே தலைபோனாலும் ஒருவரும் வாழார் ஐவர்!
ஐவரும் மடிதல் நன்றோ? ஆற்றில் நீ துணிந்து விட்ட
வெய்யவன் மகனே போரில் வீட்டுலகடைதல் நன்றோ?

**குந்தி:**

ஐயகோ!... அரக்கி நான்! என் ஆவியும் பிரியவில்லை...

**கண்ணன்:**

உய்வரும் போருக்கெல்லாம் ஒப்புதல் தந்தபின்பே
உன்னிடம் வந்தேன், செய்ய உபாயங்கள் மிகவும் உண்டு...
கன்னனை ஐவர் பக்கம் கருணையால் கூட்டுவாயேல்...
இன்னும் நல்லது, நான் பின்னர் இங்குனை வந்துகாண்பேன்.

**குந்தி:**

கண்ணா! உன் அருளால்ஐவர் கவலைகள் ஒழியவேண்டும்.

## 2

**(துரியோதனன், அரண்மனைக்கு வெளியே கண்ணனைத் தொடர்ந்து வருகிறான் கன்னன். அவனைத் திரும்பிப்பார்க்கின்றான் கண்ணன்)**

**கண்ணன்:**

கற்பகதருவும் நாணும் கையினாய் கன்னா!
இன்று அற்பனாம் துரியன் தூதுக்(கு)
அடாச்செயல் புரிந்தான்! உன்னோடு,
உற்பவித் திட்டஐவர் உரைத்திட்ட சபதம், பொய்யாய்
நிற்குமென்றஞ்சி... அந்த
நிலவறைச் செயல்... மன்னித்தேன்

**கன்னன்:**

என்ன சொல்கின்றாய் கண்ணா!
என்னுடன் பிறந்தார் யாவர்...?
என்னை யீன்றவளும் யாரோ? இயம்புக உண்மை...



இலவச விநியோகத்திற்காக

**கண்ணன்:** (சிரித்துக்கொண்டே)

கன்னா!
இன்னுமா விளங்கவில்லை! இரவியின் அருளால் குந்தி
உன்னையே முதலில் பெற்றாள், ஊரஞ்சி ஆற்றில் விட்டாள்!
தருமனை யமனும் வீரத்தம்பியாம் வீமன்றன்னை
உருவிலான் வாயும் பெற்றான் ஒப்பிலா விஜயன் இந்(தி)ரன்
கருவினில் பிறந்தான்; அந்த நகுலசாதேவர்
மருத்துவர் மகவாய் வந்தார்; மாபெரும் குடும்பம் நீவிர்!
அந்தணன் மந்திரத்தால் அறுவரை அன்னை தெய்வக்
குந்தியும் பெற்றாள்; வேறு கூறுதற்(கு) இல்லை நீரே
இந்தநாட் டுரிமைக்காரர்? இன்றைக்கே ஐவர் பால் நீ
வந்திடல் நன்று!

**கன்னன்:**

வந்தால்?

**கண்ணன்:**

வழங்குவர் உனக்கே எல்லாம்!

**கன்னன்:**

இன்றுஎன்பிறப்புணர்ந்தேன்!
இது உண்மை எனினும் ஐவர்
என்னுடன் பிறந்தார் என்றே,
இரங்கி நான் அவர்பால் ஓடிச்
சென்றிடில்... உலகம் என்னைச்
'சீ' யெனச் சிரிக்கும் கண்ணா.

**கண்ணன்:**

என்று நீ நினைத்தால்... மேலும்
எதற்கு நான் பேசவேண்டும்...

**கன்னன்:**

ஆருமே அற்ற என்னை ஆதரித்து அன்பு செய்து
சீர்மிகு அரசும், வாழ்வும், சிந்தையும் எனக்கே தந்த
பேரருளாளன்! ஐவர் பெரும்படை எதிர்க்கும் நீண்ட
போருளது, அறிந்தும் நன்றிப்
பொருள் மறந்து அகல்வதோ யான்

**கண்ணன்:**

இனிஉன்றன் விருப்பம்; யாவும் இறைவனின் சித்தமேனும்
கனிவு நல்லதுவே தோழன் கடமையில் கருத்தாய் நிற்கும்
இனிய! நான் வருகிறேன் ஊழ்... என்ன வென்றறிவோம்...

**கன்னன்:**

நன்று.

**கண்ணன்:**

(தனக்குள்) புனிதமானவனே அங்கே புரந்தரன் காத்து நிற்பான்.

(இசை)



இலவச விநியோகத்திற்காக

## 3

**(விதுரன் மனை, இந்திரன் கண்ணனைக்கண்டு வணங்குகின்றான். கண்ணன் ஆசனத்தில் அமர்கிறான்.)**

**கண்ணன்:**

இந்திரா, பருவதத்தின் இறகரிபடையாய்! நாளை
வந்துற்ற போரில் கன்னன் வாளியால் உனது பார்த்தன்
நொந்துயிர் மடிந்தால்... ஐவர்நொடியினில் மடிதல் திண்ணம்!
இந்த மானிலத்தை எல்லாம் என்றென்றும் துரியன் துய்ப்பான்.
சூதுபோர்வேளை ஐவர் சொல்லிய சபதம் பொய்க்கின்
பூதலம் கூறும் பொல்லாப் புன்வசை உனக்கே; உண்மை!
ஆதலால்...

**இந்திரன்:**

...என்செய் வேன் யான் அன்பருக் கன்ப! உன்றன்
பாதமே நம்பிநிற்கும் பஞ்சவர்தமை யார் காப்பார்?

**கண்ணன்:**

ஆழிசூழ் உலகமன்னர் அத்தனை பேரும் கூடி
ஊழிநாள் எதிர்த்தபோதும் ஒருவரும் வெல்லார்! கன்னன்
வீழுதல் விருப்பமானால் வெற்றிசேர் கவசத்தோடு
கோளிலாக் குண்டலங்கள் கோரியே பெற்றுவா போ

**இந்திரன்:**

உயிரினுக் குறுதியாகி ஒட்டியே பிறந்ததான
கவச குண்டலங்கள் கேட்டால்...?

**கண்ணன்:**

கவலையே வேண்டாம், நீ போ
உயிரைத்தான், பகைவன்தான் போய்
"உதவுக" எனினும் வெள்ளை
வெயிலொத்த நெஞ்சன், கன்னன்
தருதற்கே தயங்கான் வள்ளல்!
கவச குண்டலங்கள் பூண்ட கன்னனை வெல்லல்... முற்றும்
அவமுறும் அவன்பால் நீ போய்
அவை பெற்று வந்தால் பார்த்தன்...
எவர் வந்து பொருதினாலும் எமனுல கேற்றல் திண்ணம்
கவலைகள் விடுக; இன்றே கன்னன் பால் விரைக வெற்றி.

**இந்திரன்:**

எந்தவா(று) அவனையான் போய் அணுகுதல் நன்றோ

**கண்ணன்:**

(சற்று யோசித்து) மூத்த
அந்தணன் வடிவு தாங்கி அரைநொடிப் பொழுதில் செல்க

**இந்திரன்:**

வந்தனம் கண்ணா! நான்போய் வருகிறேன்.

**கண்ணன்:**

வணக்கம்; வாழ்க! (தனக்குள்)

தந்திரம் பலித்த தெல்லாம் சற்றினி ஓய்வு கொள்வோம்.

(இசை)

## 4

**(கன்னன் அரண்மனை வாயில்: இந்திரன் கிழப்பிராமணன் வடிவில் வந்து நிற்கிறான்.)**

**வா.காப்போன்:**
ஆரப்பா அந்தணன் நீ, அகாலத்தில் வந்ததென்னே...

**இந்திரன்:**
காரஞ்சும் கரதலத்தான் கன்னனைக் காணவந்தேன்...

**வா.கா:**
நேரத்தைத் தவறவிட்டு, நிற்கிறாய் இருட்டில் வந்து...

**இந்திரன்:**
தூரத்தே இருந்து வந்தேன் துணைசெய்ய வேண்டும் தம்பீ.

**வா.கா:**
பாவம்! இவ்விடத்தில் நில்லு, பார்க்கலாம்...
எது என்றாலும் காவலர் கருணைவாய்க்கும்...

**இந்திரன்:**
கடவுளே! காக்கவேண்டும்...
ஆவலோ(டு) எதிர்பார்க்கின்றேன்; அரசரைக்கண்டால் போதும்.
(வாயில் காப்போன் வந்து கன்னனை வணங்கி நிற்கிறான்)

**கன்னன்:**
ஏவலோய் என்ன வேண்டும்?
எவர் எனைப் பார்க்கவேண்டும்?

**வா.கா:**
தண்டோடு, நீண்ட வெள்ளைத்தாடியும் தளர்வுந்தாங்கி
கண்டவர் துதிக்கும் தெய்வக் காட்சியர் முனிவர் வந்தார்
கண்டெனும் மொழியார்;
உண்மைக் கவிஞர் போல் கதைசொல்கின்றார்.

**கன்னன்:**
கொண்டுவா அவரை இங்கே; கோரிக்கை அறிவோம்!

**வா.கா:**
நன்று.
(இந்திரனை வாயில் காப்போன் அழைத்துவர, கன்னன் எதிர்கொண்டு சென்று வரவேற்கிறான்)

**கன்னன்:**
அன்பினோடு என்பால் வந்தீர்!
அமர்க இவ்வாசனத்தில் யானும்
என்தவம் செய்துள்ளேனோ!

**இந்திரன்:**
இல்லவே இல்லை நானே
கன்னனாம் கற்பகத்தைக் கண்டிடத் தவங்கள் செய்தேன்!

தளர்ந்த என்நடையால் கால தாமத மாயிற்றப்பா...

**கன்னன்:**

உளம் வருந் தாதீர் ஐய; உமக்கென்ன வேண்டுமோ...
யான் வழங்குவன்.

**இந்திரன்:**

வழங்குவாயா!
வாழ்கநின் கொற்றம் மன்னா!
முழங்கும் உன் புகழே எங்கும்!

**கன்னன்:**

முனிவரே என்ன வேண்டும்?

**இந்திரன்:**

கற்பக தருவும் கூட, காதலை நிறைவேற்றற்கு
சிற்சில வேளை ஏனோ... சிணுங்குமாம்! நீசெய்வாயோ?

**கன்னன்:**

அற்பம் என்னுயிரும்! கேட்போர்க்கு
அளித்திடத் தவறுவேனேல்
உற்ற போர் புறம்கொடுப்போர் உறும் நரகுறுவன்...

**இந்திரன்:**

நன்று
கன்ன, நீ சூடியுள்ள கவச குண்டலங்கள் வேண்டும்.

**கன்னன்:**

இன்னே... (கவச குண்டலங்களைக் கழற்றுகிறான்.)
யான் தந்தேன்... கொள்க.

**இந்திரன்:**

இனிய நீ வாழ்க!

**அசரீரி:**

கன்னா!
என்ன காரியம் செய்தாய் நீ! இது... அந்த மாயன் சூழ்ச்சி.
குண்டலம் - கவசம் ஒன்றும் கொடுத்திடேல் உயிர்க்காபத்து!

**கன்னன்:**

(சிரிக்கிறான்) கேட்டதைக் கொடுத்தேன்; மேலும்
கேளுங்கள் கொடுப்பேன்! என்ன?
வாட்டஞ்சேர் முனிவர் எங்கே?
(பிராமண வடிவம் நீங்குகிறான் இந்திரன்)
வந்தவர்...?

**இந்திரன்:**

நானே இந்திரன்!

**கன்னன்:**

வாட்சமர் வல்லகோனே வாசவா! வணங்குகின்றேன்.
ஆட்கொண்டே அருள்க!

**இந்திரன்:**

உண்மை அன்பனே, அஞ்சவேண்டாம்
உற்றபோர்க்களத்தில் நல்ல உறுதுணையாக, இந்த



இலவச விநியோகத்திற்காக

வெற்றிவேல் உதவும் கொள்க.

**கன்னன்:**

மெத்தவும் மகிழ்ச்சி ஐய!

**இந்திரன்:**

விற்சமர் வேந்தன், வீர விஜயன்மேல் இதைப்போக்காதே;
மற்சமர் வீமன் மைந்தன் கடோற்கசன் உயிரை வாங்க
வைத்துக்கொள் மகனே; நான் போய் வருகிறேன். மாநிலத்து
சத்தியம், ஈகை, அன்பு, சமத்துவம் தழைக்க உன்னால்!

## 5

**(கன்னன் மாளிகை. ஆசனத்தில் வீற்றிருக்கிறான் கன்னன். வாயில் காப்போன் வந்து வணங்குகின்றான்.)**

**வா.கா:**

குந்தியாம், உந்தாய் போல்வாள்;
குலமகள், வணங்கும் கோலம்!
வந்திருக்கின்றாள்; உம்மேல்
வாஞ்சையே பெரிதும் சொன்னாள்.

**கன்னன்:**

வந்தனன்; அழைத்துவா!
(வாயில் காப்போன் சென்று குந்தியை அழைத்து வருகிறான்)
நும் வரவு நல்வரவாகட்டும்!
வந்தனம் தாயே! உள்ளே
வருக! ஏன் தயக்கம்?

**குந்தி:**

வாழ்க!

**கன்னன்:**

அன்னை உன் வரவால் மிக்க
ஆனந்தம் அடைந்தேன்! என்னில்
என்தவம் புரிந்ததோ?
பின்... ஏனிங்கு நிற்கவேண்டும்...
பொன்னின் ஆசனத்துட்கார்க.
(வாயில் காப்போனைப் பார்த்து)
போகலாம்; அழைப்பேன் பின்னர்...

**குந்தி:**

கன்ன்; என்மகனே! (வாஞ்சை பொங்க)
உன்னைக் காணவும் பெற்றேன்

**கன்னன்:**

சொல்க...

**குந்தி:**

திருமணமாகும் முன்னே, தெய்வத்தின் விருப்பம் போல
துருவாச முனிவர்பூசைத் தொண்டுகள் புரிந்தேன் அன்னார்



இலவச விநியோகத்திற்காக

தருமொரு மந்திரத்தின் தன்மையால் கதிரோனுக்கே
அருங்கொடை மகனாம் உன்னைப்
பெற்றதும், ஆற்றில் விட்டேன்.

**கன்னன்:**

இப்படிப் பலபேர்! என்னை ஈன்றவரென்றே வந்தார்!

**குந்தி:**

அப்படி... யானும், பொன்னின்
ஆசையால் வந்தேன் என்று
செப்புகின்றாயா? (விம்மி அழுகிறாள்)

**கன்னன்:**

இல்லை, தேவரின் சேலையுண்டு
பொய்ப்பவர் அணியின்... நீறாய்ப்
பொசுங்கியே அழிவர்! நீயும்...?

**குந்தி:**

உன்றனை ஈன்றதாய் நான்.
உண்மையை அந்தச் சேலை
ஒன்றுமே செய்யாது, எங்கே
உடனதைக் கொண்டுவா.... போய்
என்றனை எரிக்குமானால்
எரிக்கட்டும் எரிவேன்!

**கன்னன்:**

ஆமாம்...!! (போய்க்கொண்டே தனக்குள்)
நன்றிது மாயன் ஆட்டும் நாடகம் போலும்...
(சேலையோடு திரும்பிவந்து)
தாயே இங்குளது அந்தச்சேலை...!

**குந்தி:**

இதோ அணிந்திடுவேன் மைந்த!
(சேலையை அணிகிறாள்)
தங்கமே கன்னா! நானுன் தாயென்பது அறிக!

**கன்னன்:**

அம்மா...!
(குந்தியை இறுக அணைத்து விம்முகின்றான்)
"அங்கர்கோன் அனாதை" என்னும்
அவச்சொல்லை அழித்தாய்!

**குந்தி:**

வீரச்சிங்கமே! உனைவளர்க்கச் செய்திலன் பாக்யம்

**கன்னன்:**

தாயே, கடந்தவை நினைந்து;
நெஞ்சம் கலவ்வதில் பயன்தான் ஏது ?

**குந்தி:**

உடன்பிறந்தார்கள் ஐவர்! உன்னடி போற்ற வையம்..
அடங்கலும் நீயே ஆள்வாய்; ஐவர் பால் வருக மைந்த...!



இலவச விநியோகத்திற்காக

**கன்னன்:**

இடங்கொடேன் இதற்கு மட்டும்!
எப்படி நன்றி கொல்வேன்?
பெற்ற போது அன்பில்லாதோ
பெரும் பழிக்கு அஞ்சியோ... நீர்
அற்றை நாள் ஆற்றில் விட்டீர்!

**குந்தி:**

ஆமப்பா... (கதறி) செய்தேன் பாவி!

**கன்னன்:**

இற்றை நாள் வரையும் என்னை
ஏற்றதோர் துணையென் றெண்ணி
கொற்றவன் ஆக்கிவைத்தோன் கோமகன் துரியன்!

**குந்தி:**

உண்மை...

**கன்னன்:**

எது எவ்வாறெனினும்... கூறும் இக்கதை கேளீர் ஓர் நாள்,
சதுரங்கம் ஆடும்போது சலித்தவள் போல... பானு
மதி எழுந்தனள், அன்னாளை மறிக்க மேகலையும் பிய்ந்து
உதிர்ந்தன மணிகள் கீழே! உவ்விடம் துரியன்! கண்டேன்!
கண்டு... நான்குனிந்து நின்றேன்;
கருணையே வடிவமானோன்
அண்டையில் வந்தான்:
“என்றன் அன்பனே! மணிபொறுக்கிக் கொண்டு
நான்தரவா? இல்லைக் கோக்கவா? ” என்றான்!· உண்மை
நண்பனைப்பிரிந்து வந்தால்
நாயினும் கடையேன் ஆவேன்,
இவ்வண்ணம் உயர்ந்த கோனை,
எதிரிகள் சூழ்ந்த காலை
கைவண்ணம் எல்லாம்
சோற்றுக்கடனுக்கே வழங்கி... மாண்டால்...
உய்வண்ணம் உண்டு;
நாளை உலகமும் மதிக்கும் நம்மை!
செய்நன்றி போற்றலே நான் செயத்தகும் கருமம் இன்று..

**குந்தி:**

போர் வந்தது; இனிமேல் பேசிப் பொருளென்ன....

**கன்னன்:**

ஆமாம் தாயே...
நீர் வந்த நோக்கம் என்ன? நினைத்தவை கூறுவீரேல்

**குந்தி:**

சீர்தந்து விடுவாய். என்றன் செல்வமே!
உன்னை யாற்றின் (அழுது)
நீர்விட்ட போதே நெஞ்சில்
நெருப்பள்ளிக் கொட்டிக் கொண்டேன்!

**கன்னன்:**

அழுவதில் பயனே இல்லை.
ஆண்டவன் உள்ளான்;
போரில், விழுவது வெற்றி தோல்வி...
விதிவசப்படியே யாகும்...

**குந்தி:**

செழுமனச்செல்வா... நாளை,
செயிர்அமர்க்களத்தில்.... பார்த்தன்
இளையவன் எதிர்த்தால்...?

**கன்னன்:**

யானும் எதிர்ப்பதென் கடமை தாயே!

**குந்தி:**

கடமைதான்... எனினும் நாகக் கணையினை விஜயன் மீது
விட அவன் பிழைத்துக் கொண்டால்
(விம்மி அழுகிறாள்) வேறொரு முறை நீ.. அஃதைத்
தொடுவதும் இல்லை என்று
ஒருவரம் தருவாய் மைந்த!

**கன்னன்:**

தடையெதும் இல்லைத்தாயே; தந்தனன்! அரசரானோர்...
ஒரு முறை பாணம் ஏவி உயிர்பிழைத்திருப்போர் மீது
மறுமுறை பகழி பெய்தல் மானமோ? அறமோ? ஆண்மை
பெருமையோ! பார்த்தன் மீது
பெருங்கணை தொடுப்பன்
உய்ந்தால்
மறுமுறை தொடுக்கமாட்டேன்!
மற்றைய நால்வர் உய்வார்...

**குந்தி:**

மழைக்கையாய் கன்னா! உன்னை
மைந்தனாய்ப் பெற்றும்... பாவி
இழக்கவும் செய்தேன்...என்றால் என்விதிவசமே!

**கன்னன்:**

அம்மா...!
அளப்பதில் பயனே இல்லை,
அருச்சுனன் என்னை மாய்த்தால்
களத்தில் நின்முலைப்பால் தந்து,
"கன்னன், என்மகன்" என்பாயோ?

**குந்தி:**

பெற்றபோது... எனது கொங்கை
பெருகி அமுதுண்ணற்கும்
நற்றவம் செய்தாயில்லை நான் என்னசெய்வேன் கண்ணே!
மற்றவர் காண, உன்னை மடிமிசை இருத்தி இந்தக்
"கொற்றவன் மைந்தன்" என்றே கூவுவேன்!
உலகம் கேட்கும்!

**கன்னன்:**

மெத்தவும் மகிழ்ச்சி தாயே!
மேலும் ஓர் வரம் கேட்கின்றேன்...

**குந்தி:**

புத்திர என்ன வேண்டும்...?

**கன்னன்:**

போர்முடிவெய்தும் மட்டும்
வித்தகன் தருமன், வீமன், விஜயன்
மற்றவர்க்கும் நான் உன்
புத்திரன் என்ற உண்மை புகல்வதும் தவிர்க!

**குந்தி:**

ஏனோ...?

**கன்னன்:**

'அண்ணன்' என்றறிந்தால்,
இந்தஆழிசூழ் உலகம் எல்லாம்
என்னையே 'ஆள்க' என்று ஈந்திடுவார்கள்.

**குந்தி:**

ஈந்தால்....

**கன்னன்:**

என் அன்பன் துரியர்க்கே யான் ஈந்திடல் கடமை! பின்னால்...
உன் அன்பு மக்கள் ஐவர் ஒருவர்க்கும் அரசே இல்லை!

**குந்தி:**

நன்று; உன் விருப்பம் போல நடக்கட்டும்; மகனே கன்னா!
இன்றிங்கு பெற்ற இன்பம்
இனியென்று பெறுவேன்...(அழுகிறாள்)

**கன்னன்:**

அம்மா...!
என்றுதான் யானும்... என்றன்
இதயத்தால் அழுகிறேன். போர்...
ஒன்றுதான் மீண்டும் நம்மை ஒன்றிடச்செய்யும்.

**குந்தி:**

கன்னா... ! (விம்முகிறாள்)
சென்று நான் வரவா மைந்த...

**கன்னன்:**

(கையைத்தட்டி) சேவக இங்கே வாராய்..

**குந்தி:**

ஒன்றுமே வேண்டாம் அப்பா...
உனைக்கண்டேன் ஒன்றே போதும்!

**கன்னன்:**

சென்றுநீ நாளை அந்தச் செருக்களம் வருக; தாயே
இன்றிங்கு நிகழ்ந்த யாவும் இறப்பினும் மறவேன்...

**குந்தி:**

கன்னா...! (இருவரும் தழுவிப் பிரிகின்றனர்)
(இசை)



இலவச விநியோகத்திற்காக

## 6

**(குருஷேத்திரப் போர்க்களம்: அம்புகளால் துளைக்கப்பட்டு தேரில் வீழ்ந்து கிடக்கிறான் கன்னன். அங்கு பிராமண வடிவத்தில் கண்ணன் தோன்றுகிறான்.)**

**கண்ணன்:**

காதற்ற ஊசிதானும் கடைவழி வாராதென்றார்
மூதறிவாளர்; இந்த மூடரோ அதை எண்ணாது...
பூதலம் ஆளும் ஆசை!
போர்வெறி கொண்டு மாய்வார்!
வேதனை! மண்ணின் ஆசை
வெறியென்று தணியப்போமோ?
குருதியின் வெள்ளம்! செத்த கூடுகள் நிணத்தின் குப்பை
பருவத மலைபோல், சாவின் பயங்கர ஆட்சி! மேற்கில்
பரிதியும்.. இரவில் தூர பயணமே பாக்கி! இங்கே..
இரவியின் மகனை, எங்கே... ஏழையான்... காண்பேன்?

**கன்னன்:**

வாரீர்...

**கண்ணன்:**

அழைத்தவர் யாரப்பா?
நம் அங்கர்கோன் எங்கேயுள்ளான்...?

**கன்னன்:**

இளைத்த இக்கோலத்தோடு ஏன் வரவேண்டும் இங்கே?
துளைத்திடுவார்கள்...!

**கண்ணன்:**

தம்பீ!
தூரியனின் தோழன் போரில்...

**கன்னன்:**

பிழைத்துக் கொள்வதற்கே இல்லை!
பிராமண யாது வேண்டும்?

**கண்ணன்:**

கன்னனைக் காண வந்தேன்; கணையடி பட்டு வீழ்ந்த
உன்னிடம் அலுவல் இல்லை...
(நான்கு திசைகளிலும் பார்க்கிறான்)

**கன்னன்:**

ஓ! பெரியவரே நான் தான்...

**கண்ணன்:**

கன்னனா! என்ன தம்பி... கதையளக்கின்றாய்... அந்த
மன்னனை மார்பில் எய்ய மாநிலத்து எவரால் மாளும்?

**கன்னன்:**

நினைப்பவை எதிர்மாறாக நிகழ்வதும் இலையா?
தெய்வ மனத்தினை அளந்து கண்ட
மதிவலார் எங்கே உள்ளார்?



இலவச விநியோகத்திற்காக

**கண்ணன்:**

அனைத்துமே உண்மை; ஆனால்
அங்கர் கோன் நீயா! ஏனோ
எனக்கிதை நம்புதற்கு இயலவே இல்லை.

**கன்னன்:**

ஆமாம்;
“என்னை நீ, நம்பவில்லை.. இல்லையா? ஒரு காலத்தில்”
“வண்மைக்கு மட்டும் அன்று,
வாய்மைக்கும் இவனே” என்று
சொன்னது உலகம்!
நீ... என் சொல்லையே நம்பவில்லை (சிரித்து)
என்னிடம், இரப்பார்க்கு ஒன்றும்
இல்லையே... அதுதான் உண்மை.
வாழ்வுவந் துற்றால், வந்து வாழ்த்துவர்!
வழங்கக் கொள்வர்!
தாழ்வுவந்துற்றால் தாயே தள்ளவும் கூடும்! வீரர்
தோள்வலி குறைக்கத் தெய்வம் சூழ்ச்சியும் புரிதல் உண்டு
வீழ்ந்து பட்டிருக்கும்வேளை, வேதிய விளக்கம் சொன்னாய்!

**கண்ணன்:**

அருள்நிதி மழையே கன்னா! அடியனை மன்னித்துக்கொள்
இருள்படிந்திட்ட கண்கள். எதிலுமே பார்வை மங்கல்...
புரவல! பொருளைவேண்டிப்
புகழ்பவர்உளர். நான்உன்றன்
அருளையே நம்பி வந்தேன்...

**கன்னன்:**

ஐயரே என்ன செய்வேன்...!
கூட்டினை விட்டு நீங்கக் குமுறும் ஓர் பறவைக்குஞ்சின்
பாட்டிலே உயிர்! உள்நின்றும்
பறந்ததோ... இருந்ததோ பார்

**கண்ணன்:**

தீட்டிய கணைகள் பாய்ந்து திருகிய சடலம்...ஏதும்
கேட்கலாம், வறுமை நோயைப்
போக்கலாம் என்று வந்தால்...

**கன்னன்:**

கோரிய கோரியார்தம் ‘குறையெலாம் மறைக' என்றே
வாரி நான் வழங்கும் காலை வந்திலை.
தம்பி கையால்
போரிலே சாய்ந்த
அந்திப பொழுதிலா வந்தாய்... பாவம்

**கண்ணன்:**

மாரிபோல் வழங்குவாயாம்! மாநிலம் பொய்யா சொல்லும்

**கன்னன்:**

என்கொடை பொய்யாகாது!



இலவச விநியோகத்திற்காக

**கண்ணன்:**

எனின்.... இந்த ஏழைக்கேதும்
உன்னிடம் இலையா கன்னா?
ஊர்க்கதை நம்பிவந்தால்...

**கன்னன்:**

என்ன? என்னிடம் இப்போது இருப்பவை
எவையோ கேளும்.

**கண்ணன்:**

கன்ன... நீ காலமெல்லாம் பண்ணிய தருமபுண்(ணி)யம்

**கன்னன்:**

வேண்டுமா.....!! தந்தேன்! அன்பின்
வேதிய விரைந்து கொள்க!

**கண்ணன்:**

ஆண்டவா.. (சிரித்து) என்ன வார்த்தை...?
அதற்கென்ன உறுதிஉண்டோ?

**கன்னன்:**

ஈண்டு நீர்க்கு எங்கு போவேன்?

**கண்ணன்:**

எங்குண்டோ தாரை வார்க்க....
வேண்டும்; நான் போகவேண்டும்!
விரைந்து செய் விருப்பமானால்...
(உடம்பை அசைக்கமுடியாத நிலையில் நாலாபக்கமும் வேதனையோடு உற்றுப் பார்க்கிறான் கன்னன். ஏதோ தீர்மானத்திற்கு வருகிறான்)

**கன்னன்:**

பார்ப்ப உன்கையில் தாரை
பண்ணுதற்கேற்றதான
நீர்ச்செம்பு இங்கு இல்லை. ஆனால்...
நெஞ்சமாம் செம்பில் செந்நீர்
வார்ப்பன்... உன் கரங்கள் நீட்டி
வாங்கிக்கொ..ள் தந்தேன்! தந்தேன்!!
(நெஞ்சில் புதைந்த அம்பைப் பிடுங்கி அதில் ஒழுகும் குருதியை அந்தணர் கையில் தாரை வார்க்கிறான் கன்னன். அந்தணர் மறைய அங்கு கண்ணன் சுயரூபத்தில் காட்சியளிக்கின்றான்.)

**கண்ணன்:**

போர்க்களம் தனிலும் கன்னா!
புகழ்க்களம் சமைத்தாய் வாழ்க!

**கன்னன்:**

மாதவா, சரணம்!
கோர மரணத்தின்மடியில் நான்! - நீ
காதலால் என்னை இங்கு காணவும் வந்தாய்... என்றால்
பேதை என்தவத்தை எண்ணிப் பேரின்பம் எய்துகிறேன்!

**கண்ணன்:**

ஈதலே வாழ்வென்றெண்ணும்

இனியனே என்ன வேண்டும்?

**கன்னன்:**

அன்னையும் தம்பிமார்கள்
ஐவரும் இருந்தும், வாழ்வில்
அன்னியனாக வாழ்ந்து,
அமரிடைப்பட்டு மாளும்
என்னைப் போல் அனாதை மைந்தர்,
இனியும் இங்கெய்தா வண்ணம்
உன்னையான் வேண்டுகின்றேன்.
உளங்கனிந் தருளல் வேண்டும்!
தாயன்பை அறியேன்; சொந்தத்
தம்பியின் கையால் மாண்டேன்!
மாயவன் உனை நான் இங்கே
மரணத்தின் போதும் கண்டேன்
ஆயின் நான் பாக்யசாலி!
ஐயனே இரப்போர்க்கு என்றும்
ஈயும் ஓர் தூய உள்ளம்... எனக்கருள்!....

**கண்ணன்:**

தந்தோம்!

**கன்னன்:**

அம்..மா...!
(கன்னன் வீழ்ந்து உயிர் விடுகின்றான்.
பின்னணியில் சோகமாக)

**பெய்யெனப் பெய்த பெருமழைக்கை ஓய்ந்ததுவோ**
**தெய்வமே உன்றன் செயல்...!**

*நீலாவணன்*
*நீலாவணனின் கவிதை நாடகங்கள்*



இலவச விநியோகத்திற்காக